Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (28 - 03 - 1991) வியாழக்கிழமை ஓசை: 38

## யாழ். அரச அதிபர் கொழும்பிற்கு இடமாற்றம்?

யாழ் மாவட்ட அரச அதிபர் மி. வைரவிக் கொழும்பில் ஒரு அமைச்சகத்துக்கு மாற்றம் பெற்று செல்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேலும் இவருடைய பதவியை நிவர்த்தி செய்யும் பொருட்டு புதிய அரச அதிபர் வர இருப்பதாகவும் புதியவர் வந்து சேர்ந்ததும் தற்போதயவர் உடனடியாக கொழும்பு செல்வதற்காகக் காத்திருப்பதாகவும் எமக்கு சில தகவல்கள் கிடைத்துள்ளன. (சே)

### சிலாவத்துறையில் நான்கு நாள் நடந்த

# தமிழீழ வரலாறு கண்டிராத மாபெரும் போர்!

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(நமது நிருபர்)

தமிழீழ வரலாற்றில் என்றுமே நடந்திராத மிகப்பெரிய போர் கடந்த 19-3-91இல் இருந்து 22-03-91 வரையிலான நான்கு நாட்கள் மன்னார் மாவட்டதிலுள்ள சிலாவத்துறைப் பகுதியில் பத்து மைலுக்குமேல் சுற்றளவிலுள்ள பரந்த பிரதேசத்தில் நடைபெற்றது இந்த நான்கு நாட்களில் சிறிலங்காவின் முப்படைகளும் மேற்கொண்ட தீவிரத் தாக்குதலின் மத்தியிலும் சிலாவத்துறை முகாம்மீது புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இம் மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகளிலும் பலர் வீரமரணமடைந்தனர். பல ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன.

இந்த நான்கு நாள் போர் தொடர்பாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச்செயலகம் விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு:

19-3-91ல் இருந்து 22-3-91 வரை நான்கு நாட்கள் தொடர்ந்து சிலாவத்துறை முகாம் மீது எம்மால் தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழீழ வரலாற்றில் என்றுமே நடந்திராதவாறு மிகப்பெரிய போராட்டம் நான்கு நாட்கள் நடந்தன.


10 மைலுக்கு மேல் சுற்றளவு உள்ள பரந்த பிரதேசத்தில் இப் போராட்டம் நடைபெற்றது.

வடக்கே தள்ளாடி, வங்காலையில் இருந்து வெளியேறி சிலாவத்துறை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்காப் படையினர் ஒரு புறம்.

தெற்கே கொண்டச்சியில் இருந்து சிலாவத்துறைநோக்கி முன்னேறமுயன்ற சிறிலங்காப் படையினர் ஒருபுறம்.

மேற்கே கடலில் இருந்து இரண்டு பெரிய கப்பல்கள், 12 பீரங்கி கப்பல்கள் தாக்குதலை நடத்த கரை இறங்கி சிலாவத்துறை நோக்கி முன்

(4ஆம் பக்கம் பார்க்க)




## கரும்புலி மேஜர் டாம்போ உட்பட பலர் வீரமரணம்

(நமது நிருபர்)

19 ஆம் திகதிக்கும் 22 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நான்கு நாட்கள் நடைபெற்ற சிலாவத்துறை இராணுவ முகாம்மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். இம் மோதலில் கரும்புலி மேஜர் டாம்போ உட்பட பல விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர். வீரமரணமடைந்த புலிகளின் விபரம் வருமாறு:

- ★ கரும்புலி மேஜர் டாம்போ (காசிப்பிள்ளை தயாபரன் மன்னார் மாவட்டம்)
- ★ மேஜர் ரஞ்சன் (செல்வநாயகம் தயாளன் யாழ். மாவட்டம்)
- ★ மேஜர் சதா (நடராசப் பெருமாள் திலீப்குமார் யாழ் மாவட்டம்)
- ★ மேஜர் செட்டி (கந்தசாமி செல்வகுமார்)
- ★ கப்டன் பாஸ்கர் செ.ரவீந்திரன் மன்னார் மாவட்டம்)
- ★ கப்டன் மொறிஸ் (சண்முகம் தவராஜா யாழ் மாவட்டம்)
- ★ கப்டன் அப்பன் (சண்முகம் சிறிதரன்)
- ★ லெப். குட்டி (இராசநாயகம் செல்வக்குமார் யாழ் மாவட்டம்)
- ★ லெப். நாதன் (இராசரசா சிவானந்தன் யாழ் மாவட்டம்)

(3ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு நாள் மோதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

சிலாவத்துறை இராணுவ முகாம் மீது 19-03-91 முதல் 22-03 91வரை நடாத்தப்பட்ட நான்கு நாள் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளினால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஆர். பி, ஜி, -04
- ★ ஆர்.பி.டி.எல்.எம்.ஜி -04
- ★ 60 மி. மீ மோட்டர் -03
- ★ ஜி.பி.எம்.ஜி -01
- ★ ரி. 81 -02
- ★ ரி. 56 -2 -01
- ★ ஏ. கே 47 -02
- ★ ஆர்.பி ஜி எறிகணை -15
- ★ 60 மி மீ மோட்டார் எறிகணை -15
- ★ ஏ. கே. ரவை -5000
- ★ நேட்டோ ரவை -1000

அதே நேரம் 20 ஆம் திகதி வங்காலை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரிடம் இருந்து ரி 56 - 02 உம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## மன்னார் மாவட்டத்தில் புலிகள்-படை கடும்மோதல்

வடக்கு மன்னார் பகுதியில் பெரும் போர் நடந்து கொண்டிருப்பதாக பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது.

வடமேற்குக் கரையோரங்களில் இருக்கும் இராணுவ முகாம்களுக்கும், வவுனியா

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகர் பகுதியில் இரு தமிழர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா நகர் பகுதியில் தமிழ்ப்பொதுமக்களில் இருவர் இனந்தெரியாத குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: கடந்த 22 ஆம் திகதி கல்மடு பகுதியிலிருந்து நகரத்தை நோக்கிச்சென்ற இரு ஓட்டோபஸ்தார் காணாமல் போயினர்.

கடந்த 25ஆம் திகதி காணாமல் போன இருவரும் துப்பாக்கியால் சுடப்பட்ட காயங்களுடன் தோணிக்கல் சந்திப் பகுதியில் சடலங்களாகக் காணப்பட்டனராம்.

முத்துச்சாமி சின்னையா 37, என்பவரும் நாதன் என்று அழைக்கப்படும் நபருமே சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்களாவர். (தி)

## கிணற்றில் போட்டது ஒன்று மீட்டெடுத்தது நான்கு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் தோப்பூர்ச் சந்தியில் முகாம் அமைத்திருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மணற்சேனை என்ற இடத்தைச்சேர்ந்த சுந்தரம் நாதன் என்பவரைப் பிடித்துக் கத்தியால் குத்திக் கொலை செய்தனர். அவரது உடலை அங்கிருந்த ஒரு கிணற்றில் தூக்கிப் போட்டுள்ளனர்.

இக்கிணற்றிலிருந்து சுந்தரம் நாதனின் உடலை மீட்ட பொழுது மேலும் மூவரது ச

(4ஆம் பக்கம் பார்க்க)

## வட ரயில் பயணிகள் பலர் அநுராதபுரத்தில் கைது

(வவுனியா)

கொழும்பிலிருந்து ரயிலில் வவுனியா நோக்கி வரும் பிரயாணிகளில் பலர் அநுராதபுரம் ரயில் நிலையத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்படுகின்றனர்.

சிறிலங்கா அரசினால் தடை செய்யப்பட்டதாகக் கருதப்படும் பொருட்கள் கொண்டு வருபவர்களும், சந்தேக நபர்களும் மேற்படி ரயில்நிலையத்தில் வைத்து கைது செய்யப்படுவதாக இவ்வாறு கைது செய்யப்பட்டு விலக்க மறிய

(4ஆம் பக்கம் பார்க்க)

முத்தமிழ் விழா ஏப்ரல் 6 முதல் 15 வரை

## வரிவிளம்பரம்

### தேவை

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும். எஸ். சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு றேடியோ பின்புறம், யாழ்ப்பாணம். (B 2169)

### SLEAS

SLEAS: பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச் சார்பு, கிரகித்தல் நூல்கள் எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: க. குணராசா எம். ஏ. B-1204)

### வினாத்தாள் விற்பனை

ஆண்டு 5 (புலமைப் பரிசில் பரீட்சைக்கான) கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் புள்ளியிடும் திட்டம், விடைகளுடன்) விற்பனைக்குண்டு. Bond Institutes, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (B/2213)

# தினசரி வடக்கிற்கு 10 லோட் மண்ணெய்

(கொழும்பு)

வடக்கே ஒரு நாளைக்கு சுமார் பத்துக்கு மேற்பட்ட லோட் மண்ணெண்ணெய் வாகனங்களில் எடுத்துச்செல்லப்படுவதாக சிறிலங்காவின் உத்தியோக பூர்வ இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாம்.

கூட்டுப்படை செயலகத்தின் அனுமதியுடன் 850 பரல் மண்ணெண்ணெய் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## வேலை வாய்ப்பு

### செய்தித்தகவல் மையம் (கோப்பாய்)

தமிழில் நன்கு எழுதக்கூடிய குறித்த ஒரு விடயத்தை சுருக்கி எழுதும் திறனுடைய க. பொ. த உயர்தரம் படித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் விண்ணப்பங்கள் யாவும் நேரிலோ அல்லது தபால் மூலமோ 2 04. 91 க்கு முன்னர் ''நிர்வாகி'', செய்தித் தகவல் மையம்-கோப்பாய்' என்ற விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப மேலுறையின் இடது பக்க மூலையில் ''வேலை வாய்ப்புக்கான விண்ணப்பம்'' என எழுத வேண்டும். நேர்முகப்பரீட்சை 05 04. 91 இல் நடைபெறும். நேர்முகப்பரீட்சையின் போது வயது, கல்வித்தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் குறிக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் (கிராமசேவை அலுவலர்) சமர்ப்பிக்க வேண்டும். மாவீரர் குடும்பத்தினராயின் தமது பகுதியிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதேசப் பொறுப்பாளரின் சிபார்சுக் கடிதமும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தினராயின் கிராம சேவை அலுவலரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதமும் மேற்குறிப்பிட்ட பத்திரங்களோடு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தினால் தமிழில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். வேதனம் வழங்கப்படும்.

- "நிர்வாகி" (செ. த. மை)

(B- 2210)

### தங்கம் கடத்தியவர்கள் பிடிபட்டனர்

(கொழும்பு)

ரூபா 2,85,000 பெறுமதியான எட்டுத் தங்கப் பிஸ்கோத்துக்களாகக் கடத்த முயன்ற இரு தமிழர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்கப் பகுதியினரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். இச் சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம் பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம்

### ஆலைய பாதுகாப்பு காவலர்

1991 03.18 அன்று நடைபெற்ற மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு எம்மால் அனுப்பப்பட்ட கடிதம் தாமதமாகக் கிடைக்கப்பெற்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் 1991.04 02 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சபை அறையில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1991 03.21

(B-2196)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 26. 05. 1984

உதிர்வு 07. 04. 1990

### அமரச்செல்வம் வேல்முருகு - செந்தூரன் (எழுதுமட்டுவான்)

திதி; 28- 03- 1991

வலம்புரி முத்தென வையம் வந்தாய்
வனப்புடைய எம் குடிக்குத் தீபமானாய்
வதனத்துடன் மழலை மொழி பேசுகையில்
வந்ததுவே விருந்தென்ற வடிவத்தோடு
வரும் வழியில் வாகனத்தால் வருந்தினாயே
திருந்திடுவாய் திரும்பிடுவாய் என இருக்க
தீர்விலாத துயிலதனை அணைத்திட்டாயே
சீர்பலவும் சிவனடியில் பெற்று வாழ
சிரந் தாழ்த்திக் கரம் குவித்தோம் செந்தூரானே!

வ. வேல்முருகு செந்தாளை எழுதுமட்டுவாள்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரி, சகோதரர்
மாமிமார், மைத்துனன்மார், மைத்துனிமார்
உற்றார், உறவினர்கள்.

(B-2208)

## தடைப்பட்ட O/L 90 பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர்களுக்கு மாதாந்த பயிற்சிப் பரீட்சையும் இலவச கருத்தரங்கும்

❋ இரண்டாவது பரீட்சை 29-03-1991 (வெள்ளி)

❋ எமது நிறுவனத்தில கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

| முற்பகல் — பரீட்சை | | பிற்பகல் — கருத்தரங்கு | |
|---|---|---|---|
| 7-00 | வர்த்தகம் I | 1-45 | வர்த்தகம் |
| 8-00 | கணிதம் I | 2-30 | கணிதம் |
| 9-00 | விஞ்ஞானம் I | 3-15 | விஞ்ஞானம் |
| 10-00 | தமிழ் I | 4-00 | தமிழ் |
| 11-00 | சமூகக்கல்வி I | 4-45 | சமூகக் கல்வி |
| 12-00 | ஆங்கிலம் I | 5-30 | ஆங்கிலம் |

❋ 25-03-1991 எம்மால் நடாத்தப்படவிருந்த அனைத்துப் பாடங்களுக்குமான முன்மாதிரிப் பயிற்சிப் பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

பரீட்சைப் பகுதி,
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B-2195)



## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 28

1987 ஆம் ஆண்டு நிலாவெளியில் இந்திய இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

தயாளன் (சி. அமுதலிங்கம் - நிலாவெளி)

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தேடிய தேசம்
செல்லும் முன்னர்
பாதி வழியில்
தூபியாகிப் போன
தூயவர்களே!
உங்கள்
கல்லறையிலிருந்து
கண்ணீர் விழவில்லை!
நாளை மொட்டவிழ்க்கும்
தமிழீழத்தின்
வெளிச்சம் பரவுகிறது!

(கவிதை வவுனியா திலீபன்)

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2160)

## குறைந்த விலை ❋ நிறைந்த தரம் ❋ சிறந்த சேவை

❋ மின்சாரப் பொருள்கள் ❋ அழகுசாதனப் பொருள்கள் ❋ புடவை வகைகள்
❋ எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள் ❋ சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பொருள்கள்
❋ பாடசாலை, அலுவலக உபகரணங்கள் ❋ கண்ணாடிப் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வகைகள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாகப் பெற்றுக்கொள்ள

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்திக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

குறிப்பு: எமது ஸ்தாபனம் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9-00 மணிமுதல் மாலை 5-00 மணி வரை வாடிக்கையாளர்களுக்காகத் திறந்திருக்கும்.

(B2211)

**✱ சிந்தனைக்கு ✱**

இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்.

— தமிழ்ப்பழமொழி


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 28-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## மேற்காசியாவில் அமெரிக்க தளம்

**வ**ளைகுடாப் பிராந்தியத்தில் அமெரிக்கப்படை அணி ஒன்று நிரந்தரமாக இருக்க வேண்டும் என அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. புளோரிடா இராணுவத் தளத்தில் இருந்து இதற்கான அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள். இந்த இராணுவத் தளத்தில் பலநூறு இராணுவத்தினர் இருப்பார்கள் எனவும், இதன் தலைமையலுவலகம் பாரெயினில் இயங்கும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வளைகுடாவில் ஏற்பட்ட போருக்கு முன்னர் அமெரிக்க கடற்படை அணி ஒன்று வளைகுடாப் பகுதியில் தரித்து நின்றாலும், அமெரிக்கா தள வசதி ஒன்றை வளைகுடாவில் ஏற்படுத்துவது மேற்காசியப் பிராந்தியத்திலும், இந்துசமுத்திரப் பிராந்தியத்திலும் அமெரிக்காவின் ஆதிக்கம் வலுப்பெறுவதையே காட்டுகின்றது. அத்தோடு உலகின் பெற்றோலிய வர்த்தகத்தின் பெரும்பகுதி அமெரிக்காவின் நேரடிக் கண்காணிப்பிற்கு உட்படுகின்றது என்றேகொள்ளலாம்.

வளைகுடா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் அமெரிக்க இராணுவத்தினர் வளைகுடாவிற்கு அனுப்பப்பட்டபோதே போர் முடிந்ததும் அமெரிக்க இராணுவம் முற்றாக வெளியேறுமா என்ற சந்தேகம் பலருக்கு எழுந்தது. இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிடம் வினவப்பட்டபோது போர் முடிந்ததும் அமெரிக்கப் படைகள் வெளியேறி விடும் எனத் தெரிவித்திருந்தார். சவூதி மன்னரும் இதனை உறுதிப்படுத்தியிருந்தார். ஆனால், அமெரிக்காவின் நிரந்தரப்படை அணியைவைத்திருத்தல் என்ற அறிவிப்பு அமெரிக்காவின் நீண்ட கால எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

ஈரானில் 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சியும், மன்னர் ஷா ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் மேற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்க பொருளாதார இராணுவ நலன்களைப் பெரிதாகப் பாதித்திருந்தது. அப்பாதிப்பு தற்போதைய வளைகுடாப் போரினால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

வளைகுடாப் பகுதியில் அமெரிக்காவின் இராணுவ தள உருவாக்கத்தினால் வளைகுடாப் போரில் தோல்வி அடைந்த ஈராக் மட்டும் பாதிக்கப் போவதில்லை. வளைகுடாவில் போரில்வெற்றியடைந்த அமெரிக்காவின் அரபுக் கூட்டாளிகளுக்கும், ஈராக் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ஓரளவு மறைமுகமாகவேனும்அனுமதியளித்த சோவியத்ரஷ்யா, ஈரான், இந்தியா உள்ளிட்ட முதலாம்தர வல்லரசுகளையும், பிராந்திய வல்லரசுகளையும் பாதிக்கும் விடயமாகும்.

இந்த இராணுவத்தளம் ஈரானின் இஸ்லாமிய அடிப்படைவாதப் பரவலுக்கும், இந்தியாவின் இந்து சமுத்திரச் சமாதானப் பிராந்திய கோட்பாட்டிற்கும், ரஷ்யாவின் கொல்லைப்புறப் பாதுகாப்பு என்பன வற்றுடனும் நெருங்கிய தொடர்புடையதாக மாறி உள்ளது.

ஆனால், இவற்றிற்கான பொறுப்பினை சோவியத் ரஷ்யா உள்ளிட்ட சகல நாடுகளுமே பொறுப்பேற்கத் தான் வேண்டும். வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஏகபோக பிரதிநிதியாக அமெரிக்காவை அனுமதித்தவர்கள் இன்று அதன் விளைவை அனுபவிக்கத் தொடங்கியுள்ளார்கள். இந்நிலையில் ஈராக் தொடக்கி வைத்த வளைகுடா நெருக்கடியை சாதகமாகப் பயன்படுத்தி மேற்காசியாவில் அமெரிக்கா இராஜ தந்திர இராணுவ ரீதியில் தனது முழுமையான இலக்கை அடைந்துவிட்டது என்பதே உண்மை.

## இசை, நடன நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நாளை வெள்ளிக்கிழமை 29-ம் திகதி காலை 10-00 மணி முதல் 12-30 மணிவரை இராமநாதன் நுண்கலைக் கழகத்து ஆசிரியர்கள் வழங்கும் இசை, நடன நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

ந. வி. மு. நவரத்தினம் அவர்களின் பண்ணிசை நிகழ்ச்சியும், திருமதி நந்தினி விஜயரத்தினத்தின் வீணை இன்னிசையும் இடம்பெறும்.

அத்துடன் செல்வி விக்னேஸ்வரி சரவணமுத்துவின் நடனமும் இவருக்கு திருமதி கிருஷா ந்திரவீந்திரா நட்டுவாங்கமும், என். பத்மலிங்கம் பாட்டும் எஸ். மகேந்திரன் மிருதங்கமும், செல்வி பாக்கியலட்சுமி நடராசா வயலினும் வாசிக்கின்றனர்.

# எங்களால் ஈடுகொடுக்க முடியாத ஆற்றலுள்ள மேஜர் செங்கதிர்

(செ. த. மை)

- யோகி

"வடமராட்சியிலே ஒப்பரேஷன் - லிபரேஷன் நடந்தபோதும் சரி, இந்தியப்படை இந்த மண்ணிலே வந்து நின்ற போதும் சரி செங்கதிர் இந்த மண்ணிலேதான் வாழ்ந்தார்; இந்த மண்ணிலேதான் திரிந்தார்; இந்த மண்ணிலேதான் நின்று ஒரு போராட்டத்தை நடத்தினார் செங்கதிர் ஓர் அப்பழுக்கற்ற போராளி, ஓர் உயர்ந்த மனிதன்; எங்களால் ஈடுகொடுக்க முடியாத மிகப்பெரிய ஆற்றலுள்ளவர்".

மேஜர் செங்கதிர் (நடேசு ரஞ்சிதவரதராசா) 30ஆம் நாள் நினைவு தினத்தை யொட்டிகரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர்நாயகம் திரு யோகரத்தினம் (யோகி) உரைநிகழ்த்துகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சிப் பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. நகுலேஸ் தலைமையில் இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் திரு. யோகி தொடர்ந்து பேசுகையில் செங்கதிரோடு தான் நெருக்கமாகப் பழகி ஒன்றாக வாழ்ந்த காலத்தை நினைவு கூர்ந்தார்.

செங்கதிருடைய வளர்ச்சி கண்டு பொறுக்காதவர்கள் பலருண்டு; இன்று அவருடைய மறைவு குறித்து பல பிரச்சினைகளை உருவாக்குபவர்களும் உண்டு. செங்கதிரையும், விடுதலைப்புலிகளையும் மாசுபடுத்துவதற்காக வதந்திகளைப் பரப்புகிறார்கள். ஆழமாகச் சிந்திக்கின்ற இந்தப் போராட்டத்தைப் புரிந்து கொண்டவர்களுக்குத் தெரியும்.

செங்கதிரைப் பற்றி ஒரு கதை வருகின்ற போது, மறுபக்கமாக அவர் மீது களங்கம் சுமத்துகின்ற ஒரு பணியும் தொடர்கின்றது. இது மாசுபடுத்துகின்றவர்கள் திட்டமிட்டுச் செய்கின்ற ஒரு பிரசாரம். எனவே இதன் பின்னணியை நாங்கள் புரிந்து கொண்டு அந்தப் பின்னணியினை நாங்கள் தெரிந்து கொண்டு இந்த வதந்திகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது. இது குறித்து விடுதலைப் புலிகள் அமைப்போ அதனுடன் சார்ந்தவர்களோ மிகப்பெரிய அளவில் கவலைப்படப் போவது இடையாது. காரணம் வதந்திகள் வந்து கொண்டே இருக்கும் பிரபாகரன் உயிரோடு இருக்கிறாரா என்று வரும்; அவர் இறந்து போனார் மாத்தயா சுட்டுவிட்டார் என்று வரும்; நாளை அவர் வந்து பத்திரிகையாளருக்குப் பேட்டி கொடுத்தால் அவர் முகமூடி போட்டுக் கொண்டு வந்தார் என்று வரும் ஏன்? இதிலே நாளை வந்து நின்றால் கூட அவரைத் தொட்டுப்பார்க்க வேண்டும். மீசை, பொய் மீசையாகக் கூட இருக்கலாம் என்று வரும் இவற்றுக்கெல்லாம் பதிலளித்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை ஓரளவுக்குச் சொல்லலாம்; அதற்குமேல் சொல்ல வேண்டிய தேவை எங்களுக்குக் கிடையாது.

அந்த மாபெரும் போராளி எங்களோடு திரிந்தானே - உங்களோடு கூடவே வாழ்ந்தானே அவன் இந்த நம்பிக்கையோடு இயக்கத்தில் நின்றானே- அந்த இயக்கத்தை சந்தேகிக்கின்றவர்கள் அவனை நினைவு கூர வேண்டிய தேவையுமில்லை; அவனைப் பற்றிப் பேச வேண்டிய தேவையும் அவர்களுக்குக் கிடையாது அவன் இந்த மண்ணிலே - இந்த விடுதலை இயக்கத்தை வளர்ப்பதற்காக நின்றான்; தலைவர் பிரபாகரன் மேல் மிகப்பெரிய அளவிலே பக்தியைக் கொண்டு நின்றான்.

செங்கதிரிடம் மிகச்சிறந்த பண்பு ஒன்றுண்டு எதிலுமே கள்ளப்பட்டு நின்றது கிடையாது. எப்போதும் களைத்தது கிடையாது மிகப் பெரியதொரு வளர்ச்சி இந்தப் போராட்டத்துக்கு அவராலே கிடைத்திருக்கிறது. இங்கிருக்கின்ற பிரச்சினைகளை ஆழமாக - தெளிவாக எடுத்துச் சொல்லி அவற்றுக்குப் பரிகாரம் செய்வதிலே மிகப்பெரிய ஒரு பங்கை வகித்தவர் அவருடைய இழப்பு இன்று கூட நாங்கள் ஜீரணிக்க முடியாமல்தான் இருக்கிறோம் அந்த அளவுக்கு இந்த இழப்பு எங்கள்மீது மிகப்பெரியதொரு தாக்கத்தைத் தந்திருக்கிறது." என்று திரு யோகி தமது உரையில் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி பிரசாரப் பொறுப்பாளர் திரு. சூசை, கரவெட்டி வட்டப் பொறுப்பாளர் திரு. குணபாலு; மூத்த உறுப்பினர் அரசண்ணா மகளிர் அரசியல் பிரிவைச் சேர்ந்த செல்வி மாலினி உட்பட பலர் உரை நிகழ்த்தினர்

★ லெப். ஜெனி (சத்தியவான் சந்திரலேகை யாழ். மாவட்டம்)
★ லெப் றொபேட் (குலநாதன் குலமோகன் யாழ். மாவட்டம்)
★ லெப் சைமன் (நாகராசா மோகனரூபன் யாழ் மாவட்டம்)
★ லெப். நேதாஜி (இராமலிங்கம் மங்களேஸ்வரன் யாழ் மாவட்டம்)
★ லெப் காஸ்ரோ (நடேசபிள்ளை செந்தூரன் யாழ் மாவட்டம்)
★ லெப். சுரேந்தன் (சபாலிபாலிநாத் மன்னார் மாவட்டம்)
★ லெப் சுகந்தன் (பீற்றர் அழகுராசா மன்னார் மாவட்டம்)
★ லெப். யுரோம் (வை. அந்தனிசாந் மன்னார்மாவட்டம்)
★ லெப். கஜன் செபஸ்தியன்பிள்ளைவிஜயநாத் மன்னார் மாவட்டம்)
★ லெப். ஜெனி சுந்தர் குகதாசன் யாழ்.மாவட்டம்)
★ லெப். கலா வசந்தி இராசரட்னம் யாழ். மாவட்டம்)
★ லெப். பரணி (செல்லத்துரை தவராசா)
★ 2-ம் லெப் ரஞ்சித்தாத்தா (கதிர்காமு குணபாலசிங்கம் யாழ் மாவட்டம்)
★ 2-ம் லெப். நிலாரவி (சவிதி அல்டன் ஜெபசீலன்மன்னார்மாவட்டம்
★ 2-ம் லெப் பஸில்பிரான்சிஸ் ஜேசுதாஸன் மோசை மன்னார் மாவட்டம்)
★ 2-ம் லெப். நசன் (ச. சுதாராஜ் மன்னார் மாவட்டம்)
★ 2-ம் லெப். சுமன் (முத்துராசா சோதீஸ்வரன்மன்னார் மாவட்டம்)
★ 2-ம் லெப். சுதா (மேரிக் இயூரா தேவராசா யாழ் மாவட்டம்)
★ சுந்தர் (செபமாலை மரியதபேந்திரன் யாழ் மாவட்டம்)
★ சோமன் (விநாயகமூர்த்தி ராஜேந்திரன் யாழ். மாவட்டம்)
★ தர்ஷன் (புலவர்) (யோகசுவாமிசெந்தூரன் யாழ் மாவட்டம்)
★ அம்பி (நாகலிங்கம் கனகரட்ணம் ரஞ்சன் யாழ் மாவட்டம்)
★ ஆனோல்ட் (கிருஸ்ணபிள்ளை குகன் யாழ். மாவட்டம்)
★ அன்ரனி (துரைச்சாமி அகிலன்யாழ் மாவட்டம்)
★ சிவசங்கர் (இராசேந்திர குமார் யாழ். மாவட்டம்)
★ டெனிஸ் (வேலி ஞானரூபன் வன்னிமாவட்டம்)
★ பீற்றர் (சத்தியநாதன் சிறிஸ்கந்தராசா யாழ் மாவட்டம்)
★ கோணேஸ் (சின்னத்தம்பி அன்னலிங்கம் யாழ் மாவட்டம்)
★ பப்பா (இராசலிங்கம் பத்மலிங்கம் யாழ். மாவட்
★ சூரியகுமார் (கனகராசா இலங்கேஸ்வரன் யாழ். மாவட்டம்
★ ஜெ (பவான் தவநாயகி யாழ்.மாவட்டம்)
★ அசோக் (மோகனதாசன் யாழ் மாவட்டம்)
★ சயந்தன் (செல்வராசா லோகேஸ்வரன் யாழ் மாவட்டம்)
★ பஸ்தியான் (சி. யுரோமினர் மன்னார் மாவட்டம்)
★ இளங்கோ (நா. கண்ணன் மன்னார் மாவட்டம்)
★ கனகன் (க. ரஞ்சித்குமார் மன்னார் மாவட்டம்)
★ ஜீவா (கா. கோபாலுப்பிள்ளை மன்னார் மாவட்டம்)
★ பூபால் (நா. வடிவேல் மன்னார் மாவட்டம்)
★ பரமசிவன் (கிருஷ்ண கோபால் வசந்தகுமார் மன்னார் மாவட்டம்)
★ பாணன் (பாலசிங்கம் குணபாலன் மன்னார்மாவட்டம்)
★ பாலசுந்தரம் (மன்னார் மாவட்டம்)
★ சேகரன்(மன்னார் மாவட்டம்)
★ சந்திரகாந் (கா. ராமு மன்னார் மாவட்டம்)
★ ராப (மன்னார்மாவட்டம்
★ ரத்தினம் (அந்தோனிப்பிள்ளை மரியநாயகம்) மன்னார் மாவட்டம்)
★ ஜெரோமி (நடராசா சகாயராசா யாழ். மாவட்டம்)
★ சசிக்குமார் (வன்னி மாவட்டம்)
★ சூரி (வன்னி மாவட்டம்)
★ சங்கர் (வன்னிமாவட்டம்)
★ ஜெயசக்தி
★ நவ்வி
★ வாணி
★ காவேரி
★ அனித்தா
★ சத்தியமலர்
★ சிவாகரன் (தா. யோசப் சால்ஸ்
★ மரியநாயகம் (த. சின்னத்துரை)
★ குட்டி (நல்லையா நவரத்தினம்,
★ உசான் (சந்தானம் தேவநாயகம்)
★ மது (இமானுவேல் சுரேஸ்)
★ ஜெமிலான் (இரத்தின குலசிங்கம் நிமலன்)
★ மதன் (முருகேசு கமலகாசன்)
★ காந்தராஜா (நாகராஜா ஜெயக்குமார்)
★ நவீனன் (வீரசிங்கம் சபேசன்)
★ கிறி (தங்கரட்ணம் நந்தகுமார்)
★ ராயு (குமாரசாமி சிவநாதன்)
★ கலாதரன் (விநாயகமூர்த்தி சிவனேஸ்)
★ உத்தமன் (பழனியாண்டி வேலு)
★ விஷ்ணு (கனகரத்தினம் நித்தியானந்தன்)
★ மணிமுடி (பாலசிங்கம் கிரிதரன்)
★ பீற்றர் (தெய்வேந்திரம் தவராசா)
★ கலைச்செல்வன் (குலசிங்கம் மணிவண்ணன்)

# தாய்நாட்டிற்கு நன்மை என்றால் செந்தொழியும் நாளும் திருநாளே

## -துணைவேந்தர் துரைராசா

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகள் தம்மை ஆளாக்கிய மண்ணை மறந்து மேற்குலகப் பசுமை நிலங்களைத் தேடி ஓடிக்கொண்டிருக்கும் இந்தவேளையில் எம்மையீன்ற தாய்த்திருநாட்டிற்குத் தினை அளவேனும் நன்மைசெய்வதே என்றால் செந்தொழியும் நாளும் எமக்குத் திருநாளேயாகும் என்று உறுதிபூண்டு அதனைச் செய்து காட்டிய மண்ணின் மைந்தன் கலாநிதி கந்தையாவை நம் மறந்தாலும் இந்தமண் மறக்காது.

இவ்வாறு நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற விவசாய பீடாதிபதி சே. கந்தையா அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. அ. துரைராஜா தெரிவித்தார்.

கலாநிதி கந்தையாவின் பூதவுடல் கைலாசபதி கலையரங்கில் நேற்றுக்காலை 8 மணியிலிருந்து 10 மணிவரை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் பொதுமக்கள் ஆகியோர் பெருந்தொகையாகத் திரண்டு வந்து மறைந்த பேராசிரியருக்குத் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினார்கள். தொடர்ந்து நினைவஞ்சலிக்கூட்டமும் நடைபெற்றது.

இதில் தொடர்ந்து உரையாற்றிய துணைவேந்தர் மேலும் குறிப்பிடுகையில்:

பேராசிரியர் கந்தையா அவர்கள் எமது பிரதேசவளங்களைப் பயன்படுத்திப் பெருவாதாரத் துறையில் நாம்முன்னேற வேண்டும். எமது பிரதேச விவசாய மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக தமது சிரமத்தையும் பாராது அயராது உழைத்தார். அதற்காகப் பொது மக்களுடன்பல்வேறுதொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். சொந்த மண்ணிற்காக உழைத்த அவரது உடல் சொந்த மண்ணிலேயே சாய்ந்துவிட்டது என்றார்.

இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. மகேஸ்வரன், தாவரவியல் பேராசிரியர் க. தெய்வேந்திரராஜா, பதில் பீடாதிபதி நித்தியானந்தம், மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் திரு. அருணோதயன், விவசாயபீட மாணவன் திரு. கந்தரேசன் மற்றும் பலரும் உரையாற்றினார்கள். (மு)

### தமிழீழ வரலாறு

ஸ்ரீலங்கா... ஆனையிறவு முகாம் மீது...

னேறமுயன்ற சிறிலங்காப் படையினர் ஒரு புறம்

வானில் இருந்து 4 அவ்ரோ, 2 வை-12, 4 சியா மார்சட்டி விமானங்கள் குண்டுகள் 24 மணிநேரமும் தொடர்ந்து வீச 6 உலங்குவானூர்திகள் தாக்குதலை தொடுத்தவண்ணம் சிலாவத்துறை படையினருக்கு உதவி வழங்கும் முயற்சியில் ஒரு புறம்.

வடக்கு, தெற்கு, மேற்கு, (கடல்), வான் ஆகிய பகுதிகளில் இருந்து வந்த தாக்குதல்களினூடே அவர்களை எதிர்த்தவண்ணம் சிலாவத்துறை படைமுகாம் மீது இன்னுமொரு குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சிலாவத்துறை முகாமுக்கு அண்மையில் இருந்த சிலாவத்துறை பாடசாலைமுகாம், சிலாவத்துறை உதவி அரசாங்கஅதிபர் பணிமனை முகாம் இரண்டும் 19 ஆம் திகதி இரவு எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இம் முயற்சியில் எமதுதரப்பில் 25 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

சிறிலங்கா தனது முழுமையான பலத்தையே பயன்படுத்தி இப் போரை நடத்தியது.

இப் பெரிய தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர், 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

கரும்புலி மேஜர் டாம்போ முகாம் கைப்பற்றும் முயற்சியான கரும்புலித் தாக்குதலில் வீரமரணமடைந்தார்.

20 ஆம் திகதி சிலாவத்துறை முகாமை கைப்பற்ற எடுத்த முயற்சியில் எமது தரப்பில் 20பேர் வீரமரணமடைந்தனர்

20 ஆம் திகதி வங்காலையில் இருந்து வெளியேறிய சிறிலங்காப் படையினருடன் நடந்தமோதலில் ரி. 56-02 ஒன்று எம்மால் கைப்பற்றப்பட்டது.

21 ஆம் திகதி கடலில் இருந்து தாக்குதலை தொடுத்த வண்ணம் கரை இறங்க முற்பட்ட சிறிலங்காப் படையினருடன் நடந்த மோதலில் எமது தரப்பில் 10பேர் வீரமரணமடைந்தனர்.

போரின் கடைசி நாளான 22 ஆம் திகதி கொண்டச்சியில் இருந்து சிலாவத்துறைநோக்கி முன்னேறிய சிறிலங்காப்படையினருடன் நடந்த மோதலில் எமது தரப்பில் 12பேர் வீரமரணமடைந்தனர்.

அன்றையதினம் சிலாவத்துறையை சுற்றி நடந்தமோதலில் மேலும் 14 பேர் எமது தரப்பில் வீர மரணமடைந்தனர்.

தமிழீழ வரலாற்றில் முதன் முறையாக முப்படையினருடன் மோதியவண்ணம் சிலாவத்துறை முகாம் மீது தாக்குதலை நடத்தி சிங்களப்படையினருக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தி வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 15 நோயாளர் யாழ். திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் சிகிச்சைக்காகக் கொழும்பிற்குக் கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்ட நோயாளர்களில் பதினைந்து பேர் நேற்று முன்தினம் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர். கொழும்பிலிருந்து பருத்தித்துறையை வந்தடைந்த இந் நோயாளர்கள் அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ச)

## மாணவி தற்கொலை

(செ. த. மை)

பருத்தித்துறையில் உள்ள கல்லூரி ஒன்றின் உயர்வகுப்பு மாணவி மலர்விழி சின்னத்துரை (20 வயது) என்பவர் நேற்றுக் கிருமிநாசினி அருந்தித்தற்கொலைசெய்துகொண்டார்.

புற்றளை - வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த இவர் பயிருக்குத் தெளிக்க வைத்திருந்த கிருமிநாசினியை அருந்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கிணற்றில்

லங்களும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த மூவருடைய சடலங்களும் அழுகிய நிலையில்இருந்ததால் அடையாளம் காணமுடியாத நிலையிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது

சுந்தரம் நாதன் என்பவர் கடந்த 23 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

### மன்னார்

இராணுவ முகாமுக்கும் தரைவழித்தொடர்வை ஏற்படுத்தும் நோக்குடன் வான்படையின் உதவியுடன் சிறிலங்கா இராணுவம் கண் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், விடுதலைப் புலிகள் அதனை எதிர்த்து தாக்கி வருவதாகவும் பி. பி. சி கூறியது.

## தற்கொலை

(வவுனியா)

வவுனியா சச்சங்குளம் பகுதியில் இளம் ஆசிரியை ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

26 ஆம் திகதி காலை பாக்கியநாதன் ரேவதி (24) என்பவர் குடும்பத்தகராறு காரணமாக கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## மாணவர் வீர அஞ்சலி

(செ. த. மை.)

மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த மாவீரர் றொபேட் (குலநாதன் குலமோகன் (வயது 21) என்பவருக்கு தெல்லிப்பழை மகாஜனாகல்லூரி மாணவர்கள் வீர அஞ்சலி செலுத்தி கூட்டம் நடாத்தினர்.

இவர் மகாஜனாக்கல்லூரியில் 1989ல் நடைபெற்ற க. பொ. த உயர்தர பரீட்சையில் கணித பிரிவில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியினையும் பெறக்கூடியவராயிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாவீரர் விடுதலைப் போராட்டத்தில் மட்டுமல்ல கல்வியிலும் ஒரு வேங்கை என்று மாணவர்கள் புகழாரம் சூட்டினர்.

## சங்கக்கிளையில் திருட்டு

(செ. த. மை.)

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தின், உடுவில் கிழக்கிலுள்ள 16 வது கிளைக் கடையில் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கடந்த 23 ஆம் திகதி திருடப்பட்டுள்ளன. இக்கிளைக்கடையில் மூன்றாவது திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

### வட ரயில்

லில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

கதிரவேல் சிவகரட்ணம் (மடுக்கோவில்)என்ற மேற்படி இளைஞர் கடந்த 22ஆம்திகதி கைது செய்யப்பட்டு அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பலத்த தாக்குதலுக்குப் பின்னர் கடந்த 25ஆம் திகதிவிடுதலை செய்யப்பட்டார்.

இவர் மேலும் தெரிவிக்கும் போது தன்னுடன் சேர்த்து சுமார் பத்துப்பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார். (தி)

## விமானக் கடத்தல்காரர் படையினரால் சுட்டுக்கொலை

நான்கு பாகிஸ்தானியர்களால் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட சிங்கப்பூர் எயர்லைன்ஸ் விமானம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது. விமானத்தை கடத்திய நால்வரும் சிங்கப்பூர் இராணுவ அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். பயணிகள் காயம் எதுவுமின்றி மீட்கப்பட்டனர். பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கணவர் உட்பட பலரை விடுவிக்க வேண்டும் என்று விமானத்தை கடத்தியோர் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி தமக்கும் இச் சம்பவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லையென தெரிவித்துள்ளது

## ஹரியானா மாநில அரசை கலைக்கமுதல்வர்கோரிக்கை

(புதுடில்லி)

ஹரியானா சட்டப்பேரவையைக் கலைத்துவிடுமாறு அம் மாநில முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலா ஆளுநரிடம் சிபார்சு செய்துள்ளார்.

கடந்த ஐந்து நாட்களுக்கு முன் பதவியேற்ற சௌதாலா அமைச்சரவை முன்பு சட்டப் பேரவை உறுப்பினர்கள் கட்சித் தாவல் சட்டத்தின்கீழ் பதவி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பான்மைப் பலத்தை இழந்தது மக்களைவைத்தேர்தலுடன் சேர்த்து சட்டப் பேரவைத் தேர்தல்களையும் நடாத்தும்படி தேர்தல் கமிஷனுக்கு திரு. சௌதாலா சிபார்சுசெய்துள்ளதாகத் தெரிகிறது இதனிடையில் குடியரசுத் தலைவரைச் சந்தித்த எதிர்க்கட்சிகள் சௌதாலாவைப் பதவி நீக்கம் செய்து குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனம் செய்யுமாறு கோரியுள்ளனர்.

## ஈராக்கிற்கான உணவிற்கு 1கோடி 70 இலட். டாலர்ஒதுக்கீடு

(நியூயோர்க்)

ஈராக்கிற்கு அவசர உணவு உதவியாக ஒருகோடியே எழுபது இலட்சம் டொலர்களை ஐ. நா. சபையின் உணவு விவசாய ஸ்தாபனம் அனுப்பியுள்ளது.

கால்நடைகளின் உணவினை உண்ணும் அளவிற்கு ஈராக் மக்களுக்கு உணவுப் பஞ்சம் வந்துள்ளது என உணவு விவசாய ஸ்தாபனத்தின் தலைமை இயக்குநர் எட்வே சோமாவின்பரிந்துரைப்பின் அடிப்படையில் இந்த உதவி அளிக்கப்படுகிறது.

வளைகுடாப் போரினால் விவசாயம் நிலைகுலைந்துள்ளது என்றும், விவசாயத் தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட தலைமை இயக்குநர் 29,000 தொன்னுக்கும் கூடுதலான தானியங்கள், தாவரஎண்ணை, டின்களில் அடைக்கப்பட்ட மீன், இறைச்சி, பால், சர்க்கரை போன்றவற்றை ஐ. நா. ஸ்தாபனம் அனுப்புவதாக தெரிவித்தார்.

## பிற்போடப் பட்டுள்ளது

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் பாரதிதாசன் விழாவை எதிர்வரும் 30 ஆம் திகதி நடாத்த உள்ளது. 24 ஆம் திகதி கைலாசபதி அரங்கில் நடாத்தப்படவிருந்த விழாவே பிற்போடப்பட்டு மேற்படி திகதியில் நடைபெறவுள்ளது

## தவறு

சிலாவத்துறை மோதலில் வீரமரணமடைந்த போராளிகள் பட்டியலில் நவீனனின் (வீரசிங்கம் சுபேசன்) பெயர் தவறுதலாக இடம்பெற்று விட்டது என மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து செல்வராசா

(முன்னைநாள் மாநகரசபை உறுப்பினர், தர்மகர்த்தா பழனியாண்டவர் கோயில் கொழும்புத்துறை)

காலஞ்சென்ற சட்டத்தரணி சரவணமுத்துவினதும் மீனாம்பிகை சரவணமுத்துவினதும் மகனும், காலஞ்சென்ற வள்ளிநாயகியின் அன்புக் கணவருமான சட்டத்தரணி செல்வராசா காலமாகி விட்டார்.

அன்னார் சத்தியபாமா, சோமசுந்தரம், சரவணமுத்து, நித்தியானந்தன், நவாயினி சிவநாத், சிறிகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிருந்தா, சிவகுமார், நளினி, ஆனந்தன், அரவிந்தன், அபிராமி, கிறிதிகா, ஆரத்தி ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை (28-03-91) இன்று பிற்பகல் 2 மணியளவில் இலக்கம் 4 செட்டித்தெரு ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்கென செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நித்தியானந்தன் (மகன்)

(B-2214)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.